[திரு. கே.என். நேரு] [2021 செப்டம்பர் 1

இந்நிலையில் கள்ளக்குறிச்சி நகராட்சியின் கடந்த மூன்று ஆண்டுக் காலமாக உள்ள சராசரி ஆண்டு வருமானம் உரிய முறையில் கணக்கிடப்பட்டு, சராசரி ஆண்டு வருமானம் ரூ.9 கோடிக்கு மேல் இருக்கும்பட்சத்தில், கள்ளக்குறிச்சி நகராட்சியை தேர்வுநிலை நகராட்சியாகத் தரம் உயர்த்த பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) மதுரை, நாராயணபுரம், நான்குவழி உயர்மட்டச் சாலை கட்டுமானப் பணியின்போது நிகழ்ந்த விபத்து, உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரை–புதுநத்தம் சாலையில், நாராயணபுரத்தில் நடைபெறும் பறக்கும் மேம்பால கட்டுமானப் பணிகளின்போது நடந்த விபத்து குறித்து விவாதிக்க, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தி. வேல்முருகன், டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. கு. சின்னப்பா, திரு. A.R.R. ரகுராமன், திரு. மு. பூமிநாதன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை ஆகியோர் விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்கள், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பூமிநாதன் அவர்கள்.

திரு. மு. பூமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை தல்லாகுளத்திலிருந்து ஊமச்சிகுளம் வரை ஒன்றிய அரசால் சுமார் ஏழரை கிலோ மீட்டர் தூரத்திற்குக் பறக்கும் பாலம் கட்டப்படுகிறது. 28–8–2021 அன்று நாராயணபுரம் ஐயர் பங்களாவிற்கு இடையே பாலத்தின் தூண்மீது கான்கிரீட் பூசும் பணி நடந்து வந்தது. ஹைட்ராலிக் இயந்திரம் பழுதடைந்ததால், கிரேன்மூலம் அந்தப் பணிகள் நடைபெற்றன. அப்போது 120 டன் எடைகொண்ட girder–ஐ கிரேன்மூலம் தூக்கும்போது விழுந்ததால் உத்தரப்பிரதேசத்தை சேர்ந்த ஆகாஷ் என்ற தொழிலாளி இறந்திருக்கின்றார். பொறியாளர்களின் சரியான கண்காணிப்பு இல்லாத காரணத்தினால் இந்த விபத்து நடந்திருக்கின்றது.

2021 செப்டம்பர் 1] [திரு. மு. பூமிநாதன்]

இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குத் தெரிவித்துக்கொண்டு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கவனத்தை ஈர்க்கிறீர்கள். அவ்வளவுதானே, உட்காருங்கள்.*

திரு. மு. பூமிநாதன்: *ஒரு நிமிடம். கோரிப்பாளையத்திலிருந்து சுப்ரமணியபுரம், அவணியாபுரம் வரை பாலம் அமைத்துத் தருவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மதுரை மாவட்ட அமைச்சர்களான மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 28 ஆம் தேதி சனிக்கிழமை அன்று, தமிழகமே அதிர்ச்சிக்குள்ளாகின்ற வகையிலே, ஒரு மிகப் பெரிய கோர விபத்து மதுரையில் ஏற்பட்டிருக்கின்றது. அந்த விபத்து ஏற்பட்டவுடன், மின்னல் வேகத்தில் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் நேரடியாகக் களத்திற்குச் சென்று, கள ஆய்வு செய்து, பத்திரிகையாளர்களையெல்லாம் சந்தித்ததை இந்த சபை அறியும். ஆனால், இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக, கடந்த கால ஆட்சியில் சில காட்சிகள் மறைக்கப்பட்டிருக்கின்றன; விபத்துகள் மறைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்னுதாரணங்கள் நிறைய இருந்தாலும், நான் ஓர் உதாரணத்தை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். 2014 ஆம் ஆண்டு முகலிவாக்கத்தில் ஜூன் மாதம் 28 ஆம் தேதி, பதினொன்று தளங்கள் கொண்ட அடுக்குமாடிக் கட்டடம் சரிந்து விழுந்தது. அதில் ஏறக்குறைய 61 பேர் உயிரிழந்தார்கள். அப்போது இந்த அவைக்குத் தவறான அறிக்கையைப் பதிவு செய்ததாக நாம் அறிகிறோம். முகலிவாக்கம் விபத்திற்கும், 61 பேர் உயிரிழப்பிற்கும் யார் பொறுப்பேற்பார்கள் என்று கேட்டதற்கு கட்டுமான நிறுவனத்தின்மீது பழியினைப் போட்டுவிட்டார்கள். எதற்கு, பொறுப்பற்ற முறையில், அஜாக்கிரதையாக இருக்கும்*

[திரு. கு. செல்வபெருந்தகை] [2021 செப்டம்பர் 1

இவர்களை நாம் ஏன் ஏற்க வேண்டும் என்பதே மிகப் பெரிய கேள்வி. அன்றைய காஞ்சிபுரத்தின் மாவட்டச் செயலாளர், இன்றைய ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள், அன்று உடனே அந்தப் பகுதிக்குச் சென்று, கள ஆய்வு செய்து, தற்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்றைக்கே அங்கே அழைத்துச் சென்று, அந்த இடத்தைப் பார்வையிட்டு, அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கெல்லாம் ஆறுதல் சொன்னார்கள். இது கடந்த கால நிகழ்வு. இது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கடந்த 28 ஆம் தேதி, சனிக்கிழமை நடந்த விபத்தும் அதைத்தான் சுட்டிக்காட்டுகிறது. எப்படி நடந்தது? பொறியாளர்கள் செய்ய வேண்டிய பணி. ஆனால், அங்கு பொறியாளர்கள் இல்லை. அந்தக் கட்டுமானப் பணியின் உரிமையாளர்கள் இல்லை. இப்படிப்பட்ட அஜாக்கிரதையால் 160 டன் பாரத்தைத் தூக்குவதற்கு குறைந்தபட்சம் 200 டன் Jockey தேவைப்படுகிறது என்கிறார்கள். ஆனால், குறைந்தபட்ச பாரத்தைத் தூக்கும் Jockey-ஐ வைத்து இயக்கியிருக்கிறார்கள். இதனால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகக் கூறி, கவனத்தை ஈர்க்கவும்.

திரு. கு. செல்வபெருந்தகை: இனி வருங்காலங்களில் இப்படிப்பட்ட துயரமான சம்பவங்களை நம்முடைய அரசு அனுமதிக்கக்கூடாது என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை–நத்தம் சாலை தேசிய நெடுஞ்சாலை ஆகும். இந்தச் சாலையில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் 544 கோடி ரூபாய் மதிப்பில் 7.30 கிலோ மீட்டர் தூரத்திற்கு நான்கு வழி உயர்மட்டச் சாலை அமைத்து வருகிறது. இந்தப் பணியினை JMC Projects (India) Ltd. என்கின்ற மும்பை நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இந்தப் பணி 5–11–2018 அன்று துவக்கப்பட்டது. இதற்கான முழு நிதியையும் ஒன்றிய அரசுதான் வழங்குகிறது.

தரக் கட்டுப்பாடு பணியை ஜெய்ப்பூரைச் சேர்ந்த நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. தற்போது 70 சதவிகிதப் பணி முடிவடைந்துவிட்டது.

2021 செப்டம்பர் 1] [திரு. எ.வ. வேலு]

28–8–2021 அன்று பிற்பகல் 5 மணியளவில் நாகனார்குளம் அருகில் அய்யங்கார் பகுதியில் இடதுபுறம் இறகு அலகு பாலத்தில் 4–வது கண்ணில், P4, P5 இடையே, ஏற்கெனவே செய்யப்பட்ட உத்திரத்தை, அதாவது, girder–ஐ தூக்கி மேலே வைக்கும் பணியில் ஈடுபட்டபோது, பளு தூக்கும் hydraulic jack இயந்திரத்தின் hose பழுதடைந்ததால், 3 உத்திரங்களும் கீழே சரிந்து விழுந்து, விபத்து ஏற்பட்டது. ஒப்பந்தக்காரரின் கவனக்குறைவுதான் இதற்கு முழுக்க முழுக்கக் காரணம் என்பதை நானும் அறிகிறேன்.

இந்த விபத்தில் உத்தரப்பிரதேசம், அகர்அலி தூதரா என்கின்ற ஊரைச் சேர்ந்த 25 வயது என். ஆகாஷ் சிங் என்பவர் உயிரிழந்திருக்கிறார். மேலும் அவருக்கு உறுதுணையாக இருந்த பீகாரைச் சேர்ந்த 22 வயதான சுரேஷ் குமார் என்பவர் சிறுகாயங்களுடன் தப்பினார்.

விபத்து நிகழ்ந்த செய்தி அறிந்தவுடனே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, உடனே அந்த இடத்திற்கு விரைந்து போகச் சொன்னார்கள். நான் போவதற்கு முன்பே தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த இடத்திற்குச் சென்றிருந்தார்கள். மேலும், நம்முடைய நிதித் துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்களும் சம்பவ இடத்திற்குச் சென்று, அங்கேயிருக்கின்ற மக்களுடைய நிலைகளையெல்லாம் அறிந்து, அவர்களுக்கெல்லாம் ஆறுதல் சொல்கின்ற பணியில் ஈடுபட்டார்கள்.

பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களும், அங்கிருந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன் அவர்களும், நம்முடைய கவனத்தை ஈர்த்த திரு. மு. பூமிநாதன் அவர்களும் அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டுள்ளார்கள்.

மறுநாள் காலை நானும், மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்களும் அந்த இடத்திற்குச் சென்று ஆய்வு செய்ததில், இந்த உத்திரத்தை ஏற்றுகின்ற அந்த girder–ஐத் தூக்குகின்றபோது, Hydraulic Jack என்கின்ற அந்த மிஷினுடன் அதை இணைக்கின்ற பகுதியில், ஏற்கெனவே அதை பலமுறை இணைத்து, இணைத்து தேய்மானம்

[திரு. எ.வ. வேலு] *[2021 செப்டம்பர் 1*

ஏற்பட்டுள்ளதன் விளைவாக, அதில் crack *இருந்து, அதன் மூலமாக* pipe*-ல் போகின்ற* oil, leakage *ஆன காரணத்தினால், அதன் உறுதித் தன்மையை அது இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சாதாரண கூலிவேலை செய்கின்ற ஆட்கள் தான் இந்தப் பணியை அங்கே மேற்கொண்டிருக்கிறார்கள்.*

பொதுவாக, இதுபோன்ற பணிகளில் ஈடுபடுகின்றபோது safety *என்கின்ற அடிப்படையில்தான், ஜெய்ப்பூரைச் சேர்ந்த* ETMA *என்கின்ற அந்த நிறுவனம்தான் அதைப் பார்த்திருக்க வேண்டும். ஆனால், சம்பந்தப்பட்ட பொறியாளர்கள் யாருமே அங்கேயில்லை என்கின்ற நிலை இருந்தது. அந்த அடிப்படையில் இந்த விபத்து எப்படி நடந்திருக்கின்றது என்பதை ஆராய்ந்து, அதற்கு* report *கொடுப்பதற்காக திருச்சி* NIT*-ஐச் சேர்ந்த* Dr. K. Baskar *தலைமையில்,* Dr. Samson Mathew, Shri Alok Bhowmick, *மாவட்ட ஆட்சித் தலைவர் என 4 பேர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் அரசின் சார்பாக கட்டளையிட்டிருக்கிறோம். அந்தக் குழுவின் பரிந்துரையைப் பெற்றபின்புதான், அதன்மீது மேல் நடவடிக்கை எடுக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள்.*

முற்பகல் 10-55

இந்த நிலையில், அந்த கம்பெனியின்மீது இன்றைக்கு வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கிறது. மதுரை தல்லாகுளம் காவல் நிலையத்தில் FIR No. *971,* Section *287, 304*A *என்ற அடிப்படையில்* FIR *போடப்பட்டு, வழக்கும் அங்கே தொடரப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில், இதுசம்பந்தமாக நான்* report *கொடுத்திருக்கிறேன். அவரும் அதைப் படித்துப் பார்த்திருக்கிறார். மேல் நடவடிக்கை எடுப்பதற்கு* NHAI*-னுடைய இயக்குநரிடத்திலே நேரடியாக நானே தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, இனி செய்கிற பணியிலே பாதுகாப்பை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டுமென்று அரசின் சார்பாகக் கூறியிருக்கிறோம். அந்த அடிப்படையிலே மேலும் இதுசம்பந்தமாக* report *வந்தவுடனேயே, நடவடிக்கை எடுக்கப்படும்.*

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களிலும் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்ற அவரது எண்ணத்தையும் அன்றைக்கு வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார். அந்தளவிற்கு இந்தக் குடிசை மாற்று வாரியம் மிகச் சிறப்பாக தன்னுடைய கடமையைச் செய்திருக்கிறது; செய்து கொண்டு வருகிறது.

ஏழையெளிய மக்களுடைய வாழ்க்கை மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த வாரியம், இனிமேல் 'தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்' (TAMILNADU URBAN HABITAT DEVELOPMENT BOARD) என்ற பெயரிலே அழைக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல; குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும் உயர்த்திட வேண்டும்; அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது என்பதை நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஆ) மதுரை, நாராயணபுரம், நான்குவழி உயர்மட்டச் சாலை கட்டுமானப் பணியின்போது நிகழ்ந்த விபத்து, உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு இந்த அறிவிப்பை வெளியிடுகிறேன். இன்று காலையிலே ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொண்டுவரப்பட்டது. மதுரை, புதுநத்தம் சாலையில், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் உயர்மட்ட மேம்பாலப் பணியின்போது, கடந்த 28-8-2021 அன்று ஏற்பட்ட விபத்தில்,

உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த ஆகாஷ் சிங் என்பவர் உயிரிழந்தார். இரு தூண்களுக்கிடையே நிறுவப்பட்டுவரும் girder இணைப்பு முறையாகப் பொருத்தப்படத் தவறியதே அந்த விபத்திற்குக் காரணம் எனத் தெரிய வந்துள்ளது. இதனையடுத்து, இந்த விபத்திற்குக் காரணமான மூன்று பேர்மீது வழக்கு ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் விபத்தில் உயிரிழந்த ஆகாஷ் சிங் அவர்களுடைய குடும்பத்தினருக்குக் கட்டுமானத் தொழிலாளர்கள் மேம்பாட்டு வாரிய நிதியிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.5 இலட்சம் நிவாரண நிதி வழங்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதி அந்தக் குடும்பத்திற்கு வழங்கப்படும்.

5. மானியக் கோரிக்கைகள், 2021–2022, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 52-மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

(ஆ) கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை

(இ) கோரிக்கை எண் 45-சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார் அவர்கள்.*

***திரு. S. அம்பேத்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க 16-வது பேரவையில் எனக்கு இரண்டாவது முறையாக மக்கள் பணியாற்றிட ஆசிர்வதித்திருக்கும் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களையும், பேரறிஞர் அண்ணா அவர்களையும் நினைவுகூர்ந்து என்னுடைய உரையைத் துவங்குகிறேன்.*